STC.No.269/2025 PW1.ஞானசேகரன்

தேதி– 04.03.2026

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் ஆசிரியராக வேலை பார்க்கிறேன், 25 வருடமாக திருவள்ளுவர் பள்ளியில் ஆசிரியராக உள்ளேன். எனக்கும், எதிரிக்கும் எப்படி பழக்கம் என்றால் எதிரியின் உடன்பிறந்த சகோதரர் மணிவண்ணன் என்னுடன் வேலை பார்த்தார், அவர் மூலம் எதிரி பழக்கம். மேற்படி விபரத்தை எனது வழக்காவணங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு ரூ.5 லட்சம் பணம் கொடுத்தேன். எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். பணமாக கொடுத்தேனா அல்லது காசோலை மூலமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். ரூ.500 ஆக 10 கட்டுகள் கொடுத்தேன்.

2. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். ரூ.25000 க்கு மேல் பணம் கொடுக்க வேண்டும் என்றால் காசோலை மூலம்தான் கொடுக்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கடனை வருமானவரியில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பிக்கவில்லை. எதிரி எந்த வங்கி காசோலை கொடுத்தார் என்றால் SBI, அரியலூர் மாவட்டம், செந்துரை கிளைக்குரிய காசோலையை கொடுத்தார். காசோலையை யார் நிரப்பினார் என்றால் எதிரி காசோலையை நிரப்பி கொண்டு வந்து என்முன்னிலையில் கையொப்பம் செய்தார். எதிரி பூர்த்தி செய்யாத காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றும், அதனை நான் நிரப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. எந்த தேதியில் காசோலை எனக்கு கொடுத்தார் என்றால் 02.02.2025 ல் கொடுத்தார். எந்த தேதியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் 06.03.2025 ம் தேதியன்று தாக்கல் செய்தேன். எதிரி ஆசிரியர் என்பதால் அவரிடம் பணம் பறிக்க வேண்டும் என்று பொய்யாக வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வட்டிக்கு பணம் வாங்கி கொண்டு தாவா காசோலையை பொறுப்பிற்காக கொடுத்தார் என்றால் வட்டிக்கு கொடுக்கவில்லை, கைமாற்றாக கொடுத்தேன். எதிரி அசலுக்கு மேல் வட்டிதொகையை கொடுத்துவிட்டார் என்றும், அவரிடம் பணம் பறிக்க வேண்டும் என்று வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. (நீதிமன்ற கேள்வி – நான் அரசு ஆசிரியர் என்றால் ஆமாம்.) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1ல் உள்ள கையொப்பத்தில் உள்ள மை மற்றும் இதர எழுத்துகளின் மையும் வெவ்வேறு என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.04 18:08:05 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam